பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

31 07 2024 **WEDNESDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. புல்லட் ரயில் திட்டப்பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.
2. நாடு முழுவதும் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தக்கோரி காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் மக்களவையில் இன்று அமளியில் ஈடுபட்டன.
3. பிரதமர் திரு நரேந்திர மோடி அரசின் சீரிய நடவடிக்கைகளால் தமிழகத்தில் சாலை கட்டமைப்பு பெரிய அளவில் வளர்ச்சி பெற்றுள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.
4. ஹமாஸ் அமைப்பின் தலைவர் இஸ்மாயில் ஹனியே, ஈரான் தலைநகர் டெஹ்ரானில் கொல்லப்பட்டார்.
5. அமெரிக்காவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீவள்ளி ராஷ்மிக – தாய்லாந்தின் **Manachaya** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

**<<<<<>>>>>**

புல்லட் ரயில் திட்டப்பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அமைச்சர், நாட்டில் முதல் முறையாக 21 கிலோமீட்டர் தூரத்திற்கு கடலுக்கு அடியில் 30 மீட்டர் ஆழத்தில் இத்திட்டத்திற்கான சுரங்கப்பாதை அமைக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

சுயசார்பு இந்தியா இயக்கத்தின்கீழ், 320 கிலோமீட்டர் தூரத்திற்கு புல்லட் ரயில் பாதை அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

**<<<<<>>>>>**

நாடு முழுவதும் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தி, காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் மக்களவையில் இன்று அமளியில் ஈடுபட்டன.

காங்கிரஸ், திமுக, சமாஜ்வாதி உள்ளிட்ட கட்சிகளின் உறுப்பினர்கள் இந்த கோரிக்கையை வலியுறுத்தி அவையின் மையப்பகுதிக்கு சென்று கோஷங்களை எழுப்பினர்.

அவைத்தலைவர் திரு ஓம். பிர்லா அமைதி காக்குமாறும், இருக்கைக்கு செல்லுமாறும் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து கோஷங்களை அவர்கள் எழுப்பியதால் அவை நண்பகல் 12 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

எதிர்க்கட்சிகள் திட்டமிட்டு அவை நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படுத்துவதாக அவர் கூறினார்.

நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு, எதிர்க்கட்சிகளின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சி முப்படைகள் தொடர்பாக தவறான தகவல்களை கூறுவதாக அவர் குற்றம் சாட்டினார்.

வன்முறையை தூண்டும் வகையில் அக்கட்சி செயல்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனால், அவையில் கடும் அமளி ஏற்பட்டது.

முன்னதாக, ஒலிம்பிக் போட்டியின் துப்பாக்கிச்சுடும் பிரிவில் வெண்கலப்பதக்கம் வென்ற இந்தியாவின் மனு பாக்கர் - சரபுஜோத் சிங் இணைக்கு மக்களவையில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

<<<<<>>>>>

நாட்டின் பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் பாதுகாப்பதற்கு மத்திய அரசு சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக சுற்றுலா மற்றும் கலாச்சாரத்துறை அமைச்சர் திரு கஜேந்திரத சிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், சர்வதேச ஒத்துழைப்போடு இந்தியாவின் கலாச்சாரத்தை உலகிற்கு எடுத்துக்காட்டும் வகையில் அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

இன்று நிறைவடையும் யுனஸ்கோவின் புராதன சின்ன தெரிவுக்குழு கூட்டம் ஆக்கப்பூர்வமான பலன்களை அளித்துள்ளதாக கூறினார்.

இந்தியாவின் தொன்மை சிறப்பு மிக்க பல இடங்களை யுனஸ்கோவின் புராதன சின்னங்கள் பட்டியலில் சேர்ப்பதற்கு மத்திய அரசு பெரிய அளவில் முயற்சி மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

கடந்த பத்தாண்டுகளில் இந்தியாவில் உள்ள 13 இடங்கள் இந்த பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் முதல் முறையாக யுனஸ்கோ புராதன சின்னங்கள் தெரிவுக்குழுவின் கூட்டம் நடைபெறுவது குறித்து மகிழ்ச்சி தெரிவித்த திரு கஜேந்திரத சிங் ஷெகாவத், அஸ்ஸாமின் மொய்டம் நினைவு குன்றுகள் இந்த பட்டியலில் தற்போது இணைக்கப்பட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் 53 தொன்மை மிக்க இடங்களை பட்டியலில் சேர்ப்பதற்கான பரிந்துரைகளையும் மத்திய அரசு தெரிவுக்குழுவிடம் அளித்துள்ளதாகவும் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறினார்.

<<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசின் சீரிய நடவடிக்கைகளால் தமிழகத்தில் சாலை கட்டமைப்பு பெரிய அளவில் வளர்ச்சி பெற்றுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அவர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், மாநிலத்தில் மூவாயிரத்து 536 கிலோமீட்டர் தூரத்திற்கு தேசிய நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

பாரத் மாலா திட்டத்தின்கீழ் பசுமை வழித்தடங்கள் பெங்களூரு – சென்னை, சென்னை – சேலம் இடையே அமைக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

81 ஆயிரத்து 131 கோடி ரூபாய் இதற்கென அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், 2 ஆயிரத்து 414 கிலோமீட்டர் தூரத்திற்கு பாரத் மாலா முதல்கட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

2 ஆயிரத்து 23 கிலோமீட்டர் தூரத்திற்கு 95 தேசிய நெடுங்சாலைத்திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

83 நெடுஞ்சாலைத் திட்டப்பணிகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வளர்ச்சியடைந்த பாரதம் மற்றும் வளர்ச்சியடைந்த தமிழகத்தை உருவாக்கும் நோக்கில் மத்திய அரசு உறுதியுடன் செயல்பட்டு வருவதாகவும், 2022-23-ஆம் ஆண்டில் 8 ஆயிரத்து 200 கோடி ரூபாய் தமிழக நெடுஞ்சாலைத் திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இது 2014-ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்டதை காட்டிலும் ஆறு மடங்கு அதிகம் என்றும் டாக்டர் எல். முருகன் சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<<<>>>>>>

பஞ்சாப், மணிப்பூர், ஜார்கண்ட் மாநிலங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள ஆளுநர்கள் இன்று பதவியேற்றுக்கொண்டனர்.

பஞ்சாப் மாநில ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள திரு குலாம் சந்த் கட்டாரியாவுக்கு, பஞ்சாப் - ஹரியானா உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு ஷீல்நாஹு பதவி பிரமாணம் செய்துவைத்தார்.

சண்டிகர் துணை நிலை ஆளுநர் பொறுப்பையும் அவர் கூடுதலாக இன்று ஏற்றுக்கொண்டார்.

மணிப்பூர் மாநில ஆளுநராக திரு லஷ்மண் பிரசாத் ஆச்சாரியா இன்று பதவியேற்றார்.

இம்பாலில் உள்ள ஆளுநர் மாளிகையில் இன்று காலை நடைபெற்ற நிகழ்ச்சியில், மணிப்பூர் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு சித்தார்த் மிருதுல் ஆளுநருக்கு பதவி பிரமாணம் செய்துவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு பைரேன் சிங், மாநில அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

ஜார்கண்ட் மாநிலத்தின் ஆளுநராக திரு சந்தோஷ் குமார் கெங்வார் பதவியேற்றார்.

ஜார்கண்ட் உயர்நீதிமன்றத்தின் பொறுப்பு தலைமை நீதிபதி திரு சுஜித் நாராயண் பிரசாத் அவருக்கு பதவி பிரமாணம் செய்துவைத்தார்.

ராஞ்சியில் உள்ள ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், முதலமைச்சர் திரு ஹேமந்த் சோரன் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

<<<<<>>>>>

காவிரி டெல்டா பாசனத்திற்காக கல்லணையிலிருந்து இன்று காலை தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

தமிழக அமைச்சர்கள் திரு கே என் நேரு, திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி, திரு டி ஆர் பி ராஜா ஆகியோர் மலர்தூவி அணையை திறந்து வைத்தனர்.

இதன்மூலம் தஞ்சாவூர், திருச்சி, நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டங்களில் உள்ள நிலங்கள் பாசன வசதி பெறும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*<u>(சவுண்ட் பைட் - தஞ்சாவூர் நந்தகோபால் - 33 செகண்ட்ஸ்)</u>*

இதனிடையே, காட்பாடியில் செய்தியாளர்களிடம் பேசிய மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு துரைமுருகன், விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி விவசாயம் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இந்நிலையில், காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளதாலும், மேட்டூர் அணை நிரம்பியுள்ளதாலும் அணையிலிருந்து திறந்துவிடப்படும் தண்ணீரின் அளவு வினாடிக்கு ஒரு லட்சத்து 25 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும் கூடுதலாக அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிட வாய்ப்பு இருப்பதால் 11 மாவட்ட காவிரி கரையோரப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, கர்நாடக அணைகளிலிருந்து உபரி நீர் அதிக அளவில் திறந்துவிடப்பட்டுள்ளதால் ஒகேனக்கல் காவிரி ஆற்றிலும் நீர்வரத்து இன்று காலை ஒரு லட்சத்து 15 ஆயிரமாக கன அடியாக அதிகரித்துள்ளது.

<<<<<>>>>>

தமிழகத்தில் இளநிலை மருத்துவ படிப்புகளுக்கான கலந்தாய்வு அடுத்த மாதம் 21-ஆம் தேதி தொடங்கும் என மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இளநிலை மருத்துவ படிப்பு மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வுக்கு இன்று முதல் அடுத்த மாதம் எட்டாம் தேதி வரை ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கலாம் என்று தெரிவித்தார்.

<<<<<>>>>>>

ஹமாஸ் அமைப்பின் தலைவர் இஸ்மாயில் ஹனியே, ஈரான் தலைநகர் டெஹ்ரானில் உள்ள அவரது இல்லத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் கொல்லப்பட்டுவிட்டதாக இஸ்லாமிக் புரட்சிப்படை என்ற அமைப்பு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, அந்த அமைப்பு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், அவருடைய வீட்டை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாகவும், இஸ்மாயில் ஹனியேயின் பாதுகாவலரும் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

கேரள மாநிலம் வயநாட்டில் நேற்று நேரிட்ட நிலச்சரிவில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 157-ஆக அதிகரித்துள்ளது.

186 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவதாகவும், நூற்றுக்கும் மேற்பட்டோரை தேடும் பணி நடைபெற்று வருவதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

நிலச்சரிவு ஏற்பட்ட பகுதிகளில் ராணுவம், தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புப்படையினர் உள்ளிட்ட அனைத்து துறையினரும் இரண்டாவது நாளாக மீட்புப் பணியில் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளனர்.

இதனிடையே, மத்திய இணையமைச்சர் திரு ஜார்ஜ் குரியன் சம்பவ இடத்திற்கு சென்று முகாம்களில் உள்ளவர்களை சந்தித்தார்.

அவர்களுக்கு தேவையான உதவிகள் அனைத்தையும் மத்திய அரசு செய்து தரும் என்றும் அவர் கூறினார்.

<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

அமெரிக்காவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீவல்லி ராஷ்மிக – தாய்லாந்தின் **Manachaya** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 6-3, 6-4 என்ற செட் கணக்கில், ஆஸ்திரேலியான் **Destanee Aiava -** அமெரிக்காவின் **Dalayna** இணையை வென்றது.

இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் நிக்கி கலியாண்டா – மெக்சிகோவின் **Hans Verdugo** இணையும் முன்னேறியுள்ளது.

**<<<<<>>>>>>**

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில், இன்று நடைபெறும் ஆட்டங்களில் இந்திய வீரர்கள் பங்கேற்கின்றனர்.

துப்பாக்கிச்சுடுதல், துடுப்புப்படகு போட்டி, பேட்மிண்டன், டேபிள் டென்னிஸ், குத்துச்சண்டை, வில்வித்தை ஆகிய பிரிவுகளில் வீரர்கள் பங்கேற்கின்றனர்.

**<<<<<END>>>>>>**